Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. STC. 200/2025**
Preliminary Register

Deposition of **PW- 1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சித்ரா | Husband Name | : | பழனிவேல் |
| Village | : | சித்தன்வாழூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எனது சித்தப்பா மகன். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடம் சம்பந்தமான பிரச்சனை தற்போது வரை நிலுவையில் உள்ளது. இவ்வழக்கு சம்பவம் 13.06.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் வயலுக்கு சென்று விட்டு வீட்டிற்கு வரும் வழியில் பிரச்சனைக்குறிய இடத்தில் கருவை மரம் இருந்தது. ஆஜர் எதிரி ஆள் வைத்து வெட்டிக்கொண்டிருந்தார். நான் அவரிடம் யார் வெடட சொன்னது என்று கேட்டேன். ஆஜர் எதிரி வெட்ட சொன்னதாக கூறினார். அவரிடம் இந்த இடம்

பிரச்சனைக்குள் உள்ளது என்றும் மரங்களை வெட்டவேண்டாம் என்றும் கூறினேன். அங்கு வந்த ஆஜர் எதிரி இங்கு உனக்கு ஏதுடீ பங்கு என்று அருவாளை என் பக்கமாக வீசினார், அது கீழே போய் விழுந்தது. பின்னர் ஆஜர் எதிரி என்னை குச்சிகாரி, தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் பேசி செறுப்பை கழட்டி எனது கண்ணத்தில் அடித்தார். அருகில் இருந்தவர்கள் சமாதானம் செய்து சண்டையை விலக்கி விட்டார்கள். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். காது வலியாக இருந்தது. வேலையை முடித்து வந்த எனது கணவர் பழனிவேல் என்னை சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். சுமார் 4 நாட்கள் அங்கு சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள விபரங்களை நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். சரியாக இருந்தது. கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பவத்திற்கு முன்பாக செங்கள் காளவாய் தொழில் செய்வதற்காக என்னிடம் நகை கேட்டிருந்தார் கொடுத்தேன். பின்னர் 50000 ரூபாய் பணம் கேட்டார் கொடுத்தேன். பின்னர் நகையை மீட்டுக்கொடுத்துவிட்டார். பணம் தருவதாக சொல்லியும் தற்போது வரை தரவில்லை. இதை மனதில் வைத்துக்கொண்டுதான் எதிரி என்னிடம் பிரச்சனை செய்தார். போலீசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

ஆஜர் எதிரி எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நிறைய பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். வட்டி சம்பந்தமாக எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு நான் ஆஜர் எதிரியின் மீது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த புகார் தொடர்பாக அன்றைய தினமே விசாரணை நடைபெற்று அதற்கு பணமாக கொடுத்து செட்டில்மெண்ட் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது மகள் வேறொரு நபரை காதலிப்பதாக கூறி ஆஜர் எதிரி

கண்டித்ததால் அப்போது ஒரு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரி காளவாய் தொழில் செய்து நல்லபடியாக உள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனது கணவரிடமும் எனது சித்தப்பாவிடமும் பணம் கொடுத்து அவர்களுக்கு சொந்தமான இடத்தில் உள்ள கருவை மரத்தை வெட்டும்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சென்று மரம் வெட்டுவதை தடுத்தேன் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி மரம் வெட்ட அழைத்து வந்த ஆட்கள் மட்டும் தான் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை என்று மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்ற மூன்றாம் நாளான 15.06.2024ம் தேதி விசாரித்தார்கள். நான் எனது வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எனது வாக்குமூலத்தில் சம்பவயிடத்தில் யாரும் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் என்னை செறுப்பால் அடித்ததாகவும் அருவாளை கொண்டு வீசியதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி செறுப்பையும் அருவாளையும் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. எனக்கும் ஆஜர் எதிரிக்கும் கொடுக்கல்வாங்களில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாகவும் எனது மகள் வேறொரு நபரை காதலித்ததை கண்டித்த போது ஏற்பட்ட பிரச்சனை காரணமாகவும் ஆஜர் எதிரியை பழிவாங்க வேண்டி ஆஜர் எதிரியின் மீது பொய்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.02.16 17:31:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.